1.4.2024 சந்தீப் பட்டாட் (பக்கம் 8 )

அவ.எண். 233/17

1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

தாவா சொத்தை பஞ்சாயத்திற்கு கொடுத்தது தொடர்பாக அதனை ரத்து செய்ய கோரி எந்த ஒரு பாரிகாரமும் இவ்வழக்கில் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பஞ்சாயத்திற்கு வழங்கப்படாத காரணத்தினால் இது குறித்து எந்த ஒரு பரிகாரமும் கோரவில்லை. வா.சா.ஆ8 வில்லங்க சான்றதிழில் தாவா சொத்து அமரபேடு பஞ்சாயத்திற்கு தானமாக கொடுக்கப்பட்ட விவரம் கண்டுள்ளது என்றால் தவறாகும். தாவா சொத்தின் மறு பகுதியை அமரபேடு பஞ்சாயத்திற்கு தானமாக கொடுகக்ப்பட்டது என்றும் இவ்வழக்கிற்காக வேண்டி தாவா சொத்தில் இருந்து எந்த ஒரு பகுதியையும் கொடுக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனத்தில் தற்போது 5ம் பிரதிவாதி வசந்தா தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்த காரணத்தினால் தான் அது தொடர்பாக கா.நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.எங்களுடைய சுவாதீனத்தை தொந்தரவு செய்த காரணத்தினால் தான் நான் புகார் கொடுத்தேன். புகார் மீது என்னை அழைத்து விசாரணை செய்யவில்லை. நான் கொடுத்த புகார் பொய்யானது என்ற காரணத்தினால் தான் என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் 5ம் பிரதிவாதி வசந்தா வசம் இருக்கின்ற காரணத்தினால் தான் பிரதிவாதிகள் தாவா சொத்து யார் சுவாதீனத்தில் உள்ள என்று குறித்து அறிய தாக்கல் செய்துள்ள நீதிமன்ற

ஆணையர் மனுவை அனுமதிக்க எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் தவறாகும். தாவா சொத்து எனக்கு எவ்விதத்திலும் உரிமைபட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு உரிமைபட்டது இல்லை என்ற காரணத்தினால் தான் அது குறித்து எந்த ஒரு கேள்வி கேட்டாலும் பதில் அளிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. அதன் காரணமாக இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை = இல்லை